1982 மார்ச் 19]

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர் - அங்கத்தினர்கள் அந்த அச்சகத்தைத் துவங்குகின்ற போது வேலை செய்த தொழிலாளர்கள் எத்தனை பேர்கள் ? தற்போது எத்தனை பேர்கள் உள்ளனர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. தற்போது தவறு நடந்து 23 தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். துவக்குகின்றபோது எத்தனை பேர்கள் சேர்ந்தார்கள், எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்ற தகவல் தற்போது என்னிடம் இல்லை.

குடியாத்தம் ஊராட்சி ஒன்றியக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 559—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை கிராமங்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் 19 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் திட்டமிட்டு அவற்றில் 13 சிற்றூர்களுக்கு ரூபாய் 3.72 இலட்சம் செலவில் திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு மீதமுள்ள 6 சிற்றூர்களுக்கு 1981—82-ல் இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 2 சிற்றூர்களில் வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன, மேலும் 2 சிற்றூர்களில் நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டு தேவை

யான பகிர்மான குழாய்களும் பதிக்கப்பட்டு விட்டன. ஒரு சிற்றூரில் நீர் ஆதாரம் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. மற்ற வேலைகள் விரைவில் துவங்கப்படும்.

மீதமுள்ள ஒரு சிற்றூரில், இன்னும் நீர் ஆதாரம் கண்டு பிடிக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுத்து முடிக்கப்பட்ட வேலைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஆண்டிலும் குடிநீர் வழங்க வாரிய அதிகாரிகளை அழைத்துச் சென்று என்னுடைய தொகுதியிலே நீர் ஆதாரமே இல்லாத கீழ்க்கண்ட கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டன. குறிப்பாக, கல்லப்பாடி, கணவாண், மோட்டூர், மூங்கப்பட்டு, மீஜுர் பகுதி, தட்டப் பாறை, கீலூர், கல்லூர், சுங்கலப்பாடி, மேலாலத்தூர், பாதாபி, கொட்டமிட்டா பகுதி இவைகளையெல்லாம் அந்த அதிகாரிகள் பார்வையிட்டு, கேட்டகரிசேஷனை மாற்றுவதன் மூலமாகத் தான் தண்ணீர் கொடுக்க முடியும் என்று அரசுக்கு எழுதியிருப்பதாக சொல்கிறார்கள். அரசுக்கு அத்தகைய தகவல்கள் வந்திருக்கிறதா? அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 13 சிற்றூர்களில் உள்ள நிலைமைகளைப் பற்றி விளக்கிச் சொன்னார்கள். ஆனால் 6 சிற்றூர்களைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்விக்கு சரியான இன்னின்ன ஊர் என்று சொல்லக் கூடிய நிலை இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் கூறிய கிராமங்களை அரசினுடைய கவனத்தில் எடுத்துக் கொண்டு அவைகளை பரிசீலனைக்கு வந்தால், செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டு, அப்படி வந்தால் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எந்தெந்த ஊர் என்று அவர்கள் சொல்வார்களேயானால், அது அந்த கேட்டகரியிலே வருகிறதா என்று பார்த்து தண்ணீர் கொடுக்க முடியுமா என்று அரசு பரிசீலனை செய்யும்.